# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.CC.11/2016 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.11 |
| Name | : | . ரமேஷ், சிறப்பு உதவி ஆய்வாளர், வடவணக்கம்பாடி காவல் நிலையம் |
| Father's Name | : | . ஆறுமுகம் |
| Village | : | . |
| Taluk | : | . |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | . 53 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of **26.09.2025.**

**எதிரி ஆஜரில் இல்லை.**

முதல் விசாரணை

நான் தற்போது வடவணக்கம்பாடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ராஜலட்சுமி, ரவிசந்திரன், செல்வழகன் அவர்கள் ' பணி ஓய்வு பெற்றுவிட்டார்கள். அதனால் அவருக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்வு செய்ய இயலவில்லை. அவர்களது கையெழுத்து எனக்கு தெரியும். நான் கோப்புகள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 14.10.2014ம் தேதி அ.சா.1னிடம் புகார் பெற்று நிலை குற்ற எண்.159/2014 இதச பிரிவு 279, 304(A) ஆகிய பிரிவின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆகும். சம்பவ சாட்சிகளாக தருமன், சகாதேவன், கெங்கதுரை காசிபிள்ளை, பெருமாள், ராஜேந்திரன், சிவகுமார், ஆசின் ரசித் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பச்சையப்பன், மோகன் முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவை அ.த.சா.ஆ.5 மற்றும் அ.த.சா.ஆ.6 ஆகும். இறந்துபோன வரதபிள்ளை பிரேதத்தின்மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தாக்கல் செய்தேன் அது அ.த.சா.ஆ.7 ஆகும். இறந்துபோன நபரின் சடலத்தின்மீது கூராய்வு செய்து பரிந்துரை செய்த மருத்துவரிடம் கூராய்வு அறிக்கை பெறப்பட்டுள்ளது. அது ஏற்கனவே அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. விபத்தில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனம் டி.என்.11 ஜெ 4995 என்கிற வாகனத்தினை ஆய்விற்கு உட்படுத்தவேண்டி மோட்டார் வாகன ஆய்வாளரிடம ் பரிந்துரை செய்து மோட்டார் வாகன அறிக்கை பெறப்பட்டுள்ளது. அந்த அறிக்கை அ.த.சா.ஆ.8 ஆகும். அந்த அறிக்கையில் விபத்து ஏற்படுத்திய வாகனம் இயந்திர கோளரினால் ஏற்படவில்லை என்றும், வாகனத்தை ஆய்வு செய்தபோது முன்பக்க வலதுபக்க முகப்புவிலக்கும், முன்பக்க வலதுபக்க மட்காடும் உடைந்திருந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள்மீது இதச 279, 304(A) ஆகிய பிரிவின்கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அரசு தரப்பு சான்றாவணம் 8-யை குறியீடு செய்ய அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 294ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு எதிரி தரப்பில் ஆட்சேபனை இன்றி குறியீடு செய்யப்பட்டது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி நான் அல்ல. நான் ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன். விசாரணை அதிகாரி வழக்கினை சரிவர புலன்விசாரண செய்யாமல் எதிரிக்கு எதிராக இறுதியறிக்கை தாக்கல் செயதுள்ளார் என்றால் சரியல்ல. எதிரி குற்றவாளி இல்லையென்றால் சரியல்ல.

**மறு விசாரணை.**

இல்லை.